**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 40** **நாள்: 19.01.2026**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி,**
**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும்**
**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம் 30.01.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**
**24.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்களிலும் 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் 19.12.2025 முதல் 18.01.2026 வரை என கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்திய தேர்தல் ஆணையமானது தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, வாக்காளர் பதிவு விதிகள், 1960 இன் விதி 12இன் உபவிதியின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிரத் திருத்தத்தின் பொருட்டு, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம் 30.01.2026 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

அதன் அடிப்படையில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் கால அவகாசம் 30.01.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, வருகின்ற 24.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்களிலும் சென்னை மாவட்டத்தில் உள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத குடிமக்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய குடிமக்கள் படிவம்-6ஐ உறுதிமொழி படிவத்துடன் (Declaration Form) சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள பெயரை நீக்க கோரவோ படிவம்-7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல் / ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) மாற்றம் செய்ய / மாற்றுத்திறனாளி (PwDs) வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்-8 மூலம் விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர்கள் அனைவரும், இந்த நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பட்டியல் தொடர்பான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகளை உரிய முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**